Spl.C.C.No.01/2025 தேதி.11.06.2026

D.W. 1 தங்கமலை

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி –**

நான் முதல் விசாரணைக்கு கடந்த 03.03.2026 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி சாட்சியம் அளித்துள்ளேன். நான் கடந்த 31.03.2026 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் 31.03.2026 ம் தேதி என்னுடன் வேறு யாரும் பணி ஓய்வு பெறவில்லை. நான் பணி ஓய்வு காலத்தை எட்டிவிட்டதால் தான் அருப்பக்கோட்டை நகராட்சி ஆணையாளர் என்னை தேர்ந்தெடுத்து சாட்சி சொல்ல அனுமதி கடிதம் கொடுத்து அனுப்பினார் என்றால் சரிதான். எனது அலுவலகத்தில் பொது தகவல் அலுவலர் யார் என்றால் முதல் நிலையில் தகவல் அளிப்பவர் மேலாளர். மேல்முறையீட்டில் ஆணையாளர் தகவல் அளிப்பவர் ஆவார். சிசிடிவி பதிவுகள் கேட்டு 1ம் எதிரியான நகராட்சி பொறியாளர் /பொறுப்பு ஆணையாளர் 04.06.2018 தேதியிட்டு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கடிதத்திற்கு யார் பதில் அளித்தது என்றால் பொதுத்தகவல் அலுவலர் /மேலாளர் மற்றும் பொறுப்பு ஆணையாளர் பதில் அளித்துள்ளார்.

நான் எனது அலுவலகத்தில் மேலாளர் தவிர்த்து வேறு ஏதேனும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த தகவலும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் கொடுக்கவில்லை. 1ம் எதிரி கோரிய 2வது குறிப்பில் 15.03.2018 முதல் 02.04.2018 வரையிலான வீடியோ தொகுப்பினை கேட்டுள்ளார் என்றால் சரிதான். வீடியோ தொகுப்பு என்றால் சிசிடிவியில் பதிவான பதிவுகள் ஆகும்.

என்னிடம் காண்பிக்கப்படும் எ.த.சா.ஆ.7 ஆனது இரண்டு பக்கங்கள் அடங்கிய ஒரே தாளாக உள்ளது என்றால் பொதுவாக இதற்கான கோப்பு பராமரிக்கப்படும். பராமரிக்கப்பட்ட கோப்பு தாக்கல் செய்யப்படவில்லை. எ.த.சா.ஆ.7 ஆவணத்தில் சிசிடிவி கேமராவில் இருந்த டிவிஆர் லஞ்ச ஒழிப்பு

துறையினரால் கொண்டு செல்லப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.த.சா.ஆ.7 ஆவணத்தின் 2 வது பக்கத்தில் 2 வது கோரிக்கைக்கு எழுதப்பட்ட குறிப்பில் எந்த பிரிவிலிருந்து குறிப்பு எழுதப்பட்டு எந்த பிரிவில் டிவிஆர் குறித்து சரிபார்க்கப்பட்டு குறிப்பு எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் 2017–2018 ம் ஆண்டு பேரேடு என்று நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள குறியீடு செய்யப்படாத ஆவணத்தில் எ.த.சா.ஆ.3 ன் அசல் என பக்கம் 125 ல் குறிப்பிடப்பட்டுள்ளது "பொருள்" என்ற தலைப்பிலேயே உள்ளது அது தீர்மானமாக காணப்படவில்லை, மேலும் என்னிடம் காண்பிக்கப்படும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2018 ம் ஆண்டு அசாஆ 20 க்கும் நான் 2017–2018 ம் ஆண்டிற்கான இரண்டு அசல் பேரேடுகள் என்று தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் பார்த்த மாத்திரத்திலேயே பெருமளவு வித்தியாசம் உள்ளது என்றால் அது 2017–2018 ம் ஆண்டிற்குரிய பேரேடுகள் தான். நான் பொய் சொல்கிறேன் என்றாலும் வழக்கிற்காக தற்போது தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

மேலும் 18.08.2017 தேதியிட்ட எ.த.சா.ஆ, 3 மற்றும் 30.11.2017 தேதியிட்ட எ.த.சா.ஆ. 4 ஆவணத்தில் கண்காணிப்பு கேமரா முறையே 7 எண்ணம் மற்றும் 8 எண்ணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். டிவிஆர் பதிவுகள் தான் எடுத்துச்செல்லப்பட்டதாக ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். சிசிடிவி கேமராக்கள் எடுத்துச்செல்லப்பட்டதாக இல்லை என்றால் சரிதான்.

தீர்மானத்திற்கான பொருள் மட்டுமே முன்வைக்கப்பட்ட நிலையில் அதை 1ம் எதிரி தனக்கு சாதகமாக பயன்படுத்தி சிசிடிவி கேமராக்கள் வழக்கு சம்பவத்திற்கு முன்பே பொருத்தப்பட்டு விட்டதாக சொல்லி வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத பொய்யாக ஆவணங்களை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

மேலும் அருப்புக்கோட்டை நகராட்சியில் 1ம் எதிரியே ஆணையாளராக இருந்தவர் என்பதால் அதிகாரத்தை பயன்படுத்தி நகராட்சி அலுவலர்களான சாட்சிகளையும், வழக்கிற்கு முன்பே சிசிடிவி பதிவுகள் எடுத்துச்சென்றதாக குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளிக்க வைத்துள்ளார் என்றாலும், பொதுத்தகவல் அலுவலரை கைக்குள் வைத்துக்கொண்டு விரும்பிய நேரம் விரும்பிய படி தகவலை பெற்று நீதிமன்றத்தில் தனக்கு சாதகமாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

தீர்மான நகல் என தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.த.சா.ஆ.3 மற்றும் எ.த.சா.ஆ.4 யை தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் என குறிப்பிடப்பட்ட காமாட்சிராஜன் என்பவருடன் செய்துகொண்ட ஒப்பந்தம், வேலை உத்தரவு, வேலை முடிந்ததற்கான சான்று, அதற்கான புகைப்படங்கள் ஆகியவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி தீர்மானமே பொய் என்பதால் தான் அந்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல.

விருதுநகர் ஊ.த.கா.பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் நகராட்சி ஆணையாளருக்கு கடிதம் மூலம் சிசிடிவி பொருத்தப்பட்டது சம்பந்தப்பட்ட விபரங்களை கேட்டு 21.11.2023ம் தேதியிட்டு கடிதம் அனுப்பி அது அன்றைய தினமே நகராட்சி ஆணையாளரால் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடிதத்திற்கு பதில் பதிவு தபாலில் 29.11.2023ம் தேதியில் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். பதிவு தபாலுக்கான ஒப்புகை அட்டை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு 29.11.2023ம் தேதியிட்ட பதில் கடிதம் விருதுநகர் ஊ.த.கா.பிரிவு அலுவலகத்தில் பெறப்படவில்லை என்றாலும், நான் பதிவு தபால் அனுப்பியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் எ.த.சா.ஆ. 9 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இவ்வழக்கு சம்பவ நாளான 02.04.2018ம் தேதி எதிரிதரப்பு

ஆவணங்களில் உள்ளது போல் டிவிஆர் பதிவுகள் எடுத்துச்செல்லப்பட்டதை தொடர்ந்து அரசு உயர் அதிகாரிகளுக்கோ, காவல் துறைக்கோ, அல்லது ஊ.த.க.பிரிவு அலுவலகத்திற்கோ பதிவுகளை மீட்டுத்தருமாரோ, பதிவுகளை வேண்டியோ கடிதம் எதுவும் எங்கள் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

எ.த.சா.ஆ.10 ஆவணத்தில் சுற்றறிக்கை நாள் 11.03.2021 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிலுள்ள விதிமுறைகள் வழக்கு சம்பவ காலமான 2017 – 2018 க்கு பொருந்தாது என்றால் சரிதான். டிவிஆர் பதிவுகள் மட்டுமே எடுத்துச்செல்லப்பட்டதாக கூறப்படும் நிலையில் சிசிடிவி கேமராக்கள் சம்பவ காலத்தில் பொருத்தப்பட்டிருந்தால் மீண்டும் டிவிஆர் மட்டுமே இன்ஸ்டால் செய்யவேண்டியது இருந்திருக்கும் சிசிடிவி கேமராக்கள் 2021ம் ஆண்டு மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்கு விடப்பட்டு மேல் இடத்திலிருந்து நிதி பெற்று பொருத்தப்பட்டிருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது என்றால் சரியல்ல. தீர்மானப்பொருளை மட்டும் வைத்துக்கொண்டு சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்ததாக தனக்கு சாதகமாக எதிரிகள் தரப்பில் ஆவணங்களை வழக்கிற்காக பொய்யாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வேறு அலுவலர் யாரும் பொய்யாக சாட்சி சொல்ல முன்வராத நிலையில் பணி ஓய்வு பெறும் நிலையில் இருந்த என்னை பிரச்சனை எதுவும் வராது நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லி பொய்யான ஆவணங்களை தயார் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் கொடுத்து அனுப்பியதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிலிருந்து எதிரியை காப்பாற்றும் பொருட்டு பொய் ஆவணம் மற்றும் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக நீதிமன்றத்தில் பொய் ஆவணங்கள் புனைந்து பொய்யாக சாட்சியம் அளித்ததற்காக என்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றால் நான் உண்மையை தான் சொல்கிறேன்.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.